வட பகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் வெளியீடு

யாழ்ப்பாணம், 1968 ஆடி

CEYLON POSTAGE 0.05

Appropriate Technology Services
12.. FORT
NALL
No.

24 21.

# ஐக்கியதீபம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# C. C. C.

## காய்கறி வகைக்கேற்ற
## "கலவைப் பசளை"

அதிக விளைச்சலுக்கு
உத்தரவாதமளிக்கின்றது.

※ ※ ※

சிறந்த பலமடங்கு விளைச்சலைப்
பெறுவதற்கு

**எங்களுடைய கலவைப் பசளைகள்
உதவிபுரியும் என்பதில்
நீங்கள் நம்பிக்கை வைக்கலாம்.**

※ ※ ※

*தயவுசெய்து இலவச
விளம்பரங்களுக்கு எழுதவும்.*

※ ※ ※

## கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனி லிமிற்றெட்

*பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டது.
அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.*

**தபால்பெட்டி இல: 33, கொழும்பு**

# C. C. C.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 2421

## இந்த இதழில்


ஆசிரியர் தலையங்கம் ... .... 3

கூட்டுறவுச் செய்திகள் ... .... 5

பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களா? அல்லது
ஒரு நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களா? ... ... 8
—தமிழில்: து. சி.

பதவி மோகம் ... ... 13
—எஸ். ரி. தம்பிராசா

போர் வேகத்தில் உணவு உற்பத்தி ... .... 16

கடவுளைக் கண்டீரா? ... ... 20
—மு. ஆழ்வார்ப்பிள்ளை

பண்ணொடு பாடும் தேவாரப்பாமாலை ... ... 22
—பண்டித வித்துவான் M. V. பாலசுந்தரம், B. O. L., F. R. A. S.

கூட்டுறவு விற்பனவு எதற்காகத் தேவை? ... 25
''கூட்டுறவாளன்''

நிலைமை ... ... 29
''கரவைக் கபூர்''

பாலர் பக்கம் .... .... 31


## அட்டைப் படம்:

தங்கக் கவிகளை அள்ளித்தந்த வங்கக் கவிஞர்-மகாகவி என உலகோர் கொண்டாடும் ஒப்பற்ற கவிஞர் தாகூரின் அறிவும், கலையும் ஒளிரும் அழகிய புகைப்படம் இவ்விதழின் அட்டையை அலங்கரிக்கின்றது. அவரது உரைநடையொன்று தமிழாக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகத் திறமையானவை

# பவர்ஸ்

உரங்கள் - கிருமிநாசினிகள் - திரவம் தெளிக்கும், பொடி தூவும் இயந்திரங்கள்.

- புகையிலை
- வெங்காயம்
- மிளகாய்
- மரக்கறி
- நெல்
- தென்னை
- வாழை

மற்றும் பழமரங்களை

இலாபகரமாய்ப் பயிரிடுக.

கிடைக்குமிடம்:—

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம்

111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கியதீபம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

ஆசிரியர்: நா. சீனிவாசகம், B. A., J. P.

மலர் 23 | யாழ்ப்பாணம் 1968 ஆடி | இதழ் 11


## அரசாங்கத் தலையீடு

இலங்கையில் முதன் முதல் கூட்டுறவு இயக்கம் ஐக்கிய நாணய சங்கங்களை நிறுவியதால் ஆரம்பிக்கப் பட்டது. அக்காலத்தில் கூட்டுறவு உத்தியோகத்தர்கள் ஒரு குறித்த பகுதியிலுள்ள மக்களை ஒன்று சேர்த்து ஓர் ஐக்கிய நாணய சங்கம் நிறுவுவதால் ஏற்படும் பலாபலன்களை எடுத்துரைப்பர். மக்கள் பலாபலன்களை நன்கு உணர்ந்த பின் ஒரு நாணய சங்கத்தை நிறுவினர். இந்த முறையில் நிறுவப் பெற்ற சங்கங்கள் நன்ருக முன்னேறி அங்கத்தவர்களுக்கு நன்மையளித்தன. அங்கத்தவர்கள் பொருளாதாரத் துறையில் நன்மை பெற்றதுடன் சுயாதீனம், ஊக்கம், விசுவாசம் ஆகிய குணதிசயங்கள் அங்கத்தவர்கள்பால் வளர்ச்சியுற்றன. எவ்வளவு பங்குடையவராயினும் ஒரு அங்கத்தவனுக்கு ஒருவாக்கே உரித்தானது. கூடிய பாலாரது சம்மதத்திற்கு அவர் கட்டுப்பட வேண்டியவராயிருந்தது.

இரண்டாம் மகா யுத்த காலத்தில் தட்டுப்பாட்டுப் பொருள்கள் பங்கீடு செய்ய வேண்டியதாயிற்று. அரசாங்கம் கூட்டுறவு இயக்க மூலமே இப்பங்கீட்டைத் திருப்திகரமாகச் செய்யலாமெனத் தீர்மானித்து நாடு பூராகவும் பண்டசாலைச் சங்கங்களைத் தோற்றுவித்து உணவுப்பங்கீட்டைச் செய்தது. இப்பண்டசாலைச் சங்கங்களின் அங்கத்தவர்கள் கூட்டுறவின் நன்மைப்பாட்டை உணர்ந்து இயக்கத்தில் சேரவில்லை. அத்தியாவசியப் பொருள்கள் பெற்றுக் கொள்வதற்கு இது ஒரு வழியெனநினைத்தே பெரும்பாலான மக்கள் அங்கத்தவர்களாகச் சேர்ந்தனர். இலங்கைக் கூட்டுறவியக்கத்தில் இப்போது நிலவும் குறைபாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்பயனாகவே தோன்றியதென எடுத்துரைக்கலாம்.

உணவுப் பொருள் பங்கீட்டுப் பொருள் உற்பத்தி, வினியோகம், சேவை ஆகிய துறைகளில் இலங்கையின் இப்போதைய முன்னேற்றம் பெரும்பாலாகக் கூட்டுறவு இயக்கத்தாலேயே உண்டானது எனத் தயங்காது கூறிவிடலாம். அரசாங்க உதவியில்லாவிடின் இத்தகைய முன்னேற்றமேற்பட்டிருக்காது. இலங்கை போன்ற பிற்போக்கான நாடுகளில் அரசாங்கத்தின் தலையீடு அத்தியாவசியமாகின்றது. இல்லாவிடின் கூட்டுறவு இயக்கம் இந்நாடுகளில் தோன்றியிருக்காது. இப்போது ஏழைமக்களுக்கு அளிக்கப்படும் உதவி பின்போடப்பட்டிருக்குமென்பதில் ஐயமில்லை. பிற்போக்கான நாடுகளில் அரசாங்கத்தின் தலையீடு எவ்வளவினதாக இருத்தல் வேண்டுமென்ற வினா எழுகின்றது.

இந்தியாவில் 1946 ல் பணியாற்றிய திட்டக்குழு, "திட்டமிடுவது அரசாங்கம் விடுக்கும் கட்டளையுடன் சம்பந்தப்பட்டதாகும். எந்த ஒரு திட்டத்திலும் அரசாங்கம் வழிகாட்டுவது போன்று கூட்டுறவிலும் வழிகாட்டுதலை எதிர்பார்க்கின்றோம்'' எனக் கூறுகின்றனர். 1949 ம் ஆண்டு இலக்குமணபுரியில் கூடிய ஆசிய தூரகிழக்கு நாடுகளில் கூட்டுறவு என்னும் விடயத்தை ஆராய்ந்த F.A.O. வின் கூட்டம் கருதுவதாவது: "கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் சுயஉதவி, சுயமாக இயங்குதல் ஆகியவற்றிற்குக் குந்தகம் விளைவிக்காது அல்லது அவற்றைக் கட்டுப்படுத்தாது கூட்டுறவு முயற்சியைத் தூண்டுதல், சரியான முறையில் அம்முயற்சிக்கு வழிகாட்டுதல் ஆகியவற்றில் உசாராக உதவி செய்தலே அரசாங்கம் செய்ய வேண்டிய உதவியாகும். அத்துடன், அது கூட்டுறவுத் தாபனங்கள் வளர்ச்சியடைவதற்குரிய சூழ்நிலையை உண்டு பண்ணுதல் வேண்டும்."

கூட்டுறவு, சமுதாயத்தின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய தனது சொந்தக் கால்களில் நிற்கக்கூடிய தாபனமாக வரும் வரையில் அரசாங்கம் ஒரு கூட்டுப்பங்காளியாக மாத்திரமே இருத்தல் வேண்டுமெனத் திரு. பணிக்கர் கூறுகின்றனர்.

அரசாங்கமும் அரசியல்வாதிகளும் கூட்டுறவாளர்களும் இதனைக் கருத்தில் வைத்து ஆவன செய்வார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு நெருப்பைப் போன்றது!

கூட்டுறவு நெருப்பைப் போன்றது. நெருப்பில்லாமல் மனிதன் வாழ முடியாது. அதுபோல கூட்டுறவு இல்லாமல் மனித இனம் வாழ இயலாது. ஆனால் நெருப்பை நாம் கவனமாகவும் நிதானமாகவும் உபயோகிப்பதுபோல கூட்டுறவையும் மேற்கொள்ளவேண்டும். இல்லாவிடில் நெருப்பு சுட்டெரித்து உலகத்தையே நாசமாக்கிவிடுவதுபோல் கூட்டுறவும் செய்துவிடும்'' இவ்வாறு சிரேஷ்ட உதவி கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு. K.S. பொன்னுத்துரை வவுனியாவில் நடைபெற்ற கூட்டுறவுத்தின விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

''கூட்டுறவுத்தினம் உலகத்தவர் எல்லோருக்கும் பொதுவான ஒரு பெருநாளாகும். கூட்டுறவாளர்கள் இத்தினத்தில் ஒருங்கு சேர்ந்து எதிர்காலத்தில் தாம் ஆற்றவேண்டிய பணிகளையிட்டுத் திட்டங்களைத் தீட்டவேண்டும்'' என அடுத்துப் பேசிய முல்லைத்தீவு ஐக்கிய மேற்பார்வைச் சபைத் தலைவர் திரு. பி. வி. மிக்கேற்பிள்ளை பேசுகையில் குறிப்பிட்டார்.

''கூட்டுறவு மூலமே விவசாயத்தை விருத்தி செய்து தன்னிறைவு காண முடியும். ஆதலால், அரசாங்கம் ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்குத் தேவையான கடனை உதவியிருக்கிறது. இதன் மூலம் விவசாயத்தைப் பெருக்கவேண்டும்'' என வவுனியா கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. N. பூரணலிங்கம் பேசுகையில் கேட்டுக் கொண்டார்.

இவ்விழாவிற்கு வவுனியா மாவட்ட கூட்டுறவுச் சமாசத் தலைவர் திரு. R. V. வில்வராசா தலைமைவகித்தார். வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. A. பெருமையினார் அவர்களால் கூட்டுறவுக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

வவுனியா காரியாதிகாரி திரு. K. மகாதேவா, செட்டிகுளம் ப. நோ. கூ. ச. சமாசத்தலைவர் திரு. N. சுப்பிரமணியம், நிருவாகக் காரியதரிசி திரு. க. கணேசலிங்கம், திரு. U. B. தசநாயகா ஆகியோரும் பேசினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையாளப் புகையிலைச் சங்கத்திற்குப் புத்துயிரளிக்கப்படும்!

மலையாளப் புகையிலை ஏற்றுமதி நிறுத்தப்பட்டதால் கடந்த சில ஆண்டுகளாக உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த யாழ்ப்பாணம் மலையாளப் புகையிலை ஐக்கிய வியாபாரச் சங்கத்திற்கு புத்துயிரளிக்கப்பட இருக்கின்றது.

இப்போது வகுக்கப்பட்டிருக்கும் திட்டத்தின்படி இச்சங்கம் பீடிக்கைத்தொழிலில் ஈடுபட இருக்கின்றது, 5000 இருத்தல் காப்பிலை இச்சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்து இச்சங்கம் பீடிப்புகையிலையைக் கொள்வனவு செய்ய இருக்கின்றது.

அணிமையில் இச்சங்கத்தினால் கூட்டப்பட்ட விசேட பொதுக்கூட்டத்தில் தலைமை தாங்கிப் பேசிய திரு. R.C.S. குக், இந்த உத்தேசத்திட்டம் சங்கத்திற்குப் புத்துயிரளிக்கும் என தான் திடமாக நம்புவதாகக் குறிப்பிட்டார். இதன் மூலமாக புகையிலை உற்பத்தியாளர் அதிக நன்மை பெறுவார்கள் என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும் அவர் பேசுகையில் அங்கத்தவர்களின் பிள்ளைகள் யாராவது பீடிக்கைத்தொழிலில் அனுபவம் வாய்ந்தவர்களாக இருந்தால் அவர்களைச் சங்கம் வேலைக்கமர்த்தும் என உறுதியளித்தார்.

அடுத்துப் பேசிய யாழ் கிழக்கு கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. V. கனகசபை "இப்புதிய முயற்சி சங்கத்திற்கு நன்மை பயக்கும் என்பதில் ஐயமில்லை" என்றார்.

பீடிக்கைத்தொழிலை ஆரம்பிக்க வேண்டும் எனவும், சங்கம் யாழ்ப்பாணம் ஐக்கிய மாகாண வங்கியிலிருந்து 1 லட்சம் ரூபாவிற்கு மேற்படாது கடன் பெறலாம் எனவும் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

சங்கத்தின் பெயரை யாழ்ப்பாணப் புகையிலை விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் என மாற்றியமைப்பது பற்றி பின்பு ஆலோசிக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

# துன்பத்தில் பங்கில்லையெனில் கூட்டுறவும் இல்லை

"ஒருவனுடைய துன்பத்தை தனது துன்பமெனக் கருதி பங்கெடுத்து, அதை அகற்றுவிடின் அது உண்மையான கூட்டுறவு வாழ்க்கையாகாது" இவ்வாறு வ. ஐ. மே. சபை கௌரவ காரியதரிசி திரு. சு. கந்தையா யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்ற கூட்டுறவுத் தின விழாவின்போது பேசுகையில் குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், "கூட்டுறவு பற்றிய அறிவைக் கற்றுத் தெளிந்து பிரசங்கம் செய்து வந்தால் மாத்திரம் போதாது, சிறந்த கூட்டுறவு நெறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி வாழ்வதே கூட்டுறவை உயர்த்துவதற்கான சிறந்த மார்க்கமாகும். கூட்டுறவின் தத்துவங்களை அறிவு சொட்ட அலங்காரமாகப் பேசிக் கொண்டு வந்தால் மாத்திரம் நாம் உயர்ந்த கூட்டுறவாளர் என்று கருதிவிடக்கூடாது. அப்படிப்பார்க்கின் பக்திப் பாடல்களைத் தினமும் இசைக்கும் இசைத் தட்டுகள்தான் விரைவில் கடவுளின் அருளைப் பெற்றுவிடும்'' என்றார்.

கலாசாலை அதிபர் திரு. க. பரமோதயன் தலைமை வகித்து வரவேற்புரை நிகழ்த்துகையில் ''உலகில் எங்கெங்கு ஊழல்களும் நேர்மையீனமும் மலிந்து இருக்கின்றனவோ அவற்றைப் போக்கும் மருந்தாக கூட்டுறவு விளங்குகின்றது'' என்றார்.

யாழ் கிழக்கு கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. V. கனகசபை உரையாற்றுகையில் சங்கங்களைக் கோயில் போலக் கருதி பயபக்தியுடன் அங்கு பணிபுரிய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

வ. ஐ. மே. சபை உபதலைவர் திரு. R. C. S. குக் பேசுகையில் ''ஆத்மாவையும் சரீரத்தையும் காக்கும் இயக்கம் கூட்டுறவு'' என்றார். தலைமைக் காரியாலயப் பரிசோதகர் திரு. நாகலிங்கம், வட்டாரப் பரிசோதகர் திரு. பொ. கோவிந்தசாமி, மேற்படி கலாசாலை மாணவர் திரு. சுப்பிரமணியம் ஆகியோரும் பேசினர்.

## பெண்களும் உழைக்க வேண்டும்

கூட்டுறவு இயக்கத்தில் பெண்களும் முன்னணியில் நின்று உழைக்க வேண்டும்'' என திருக்கோணமலை மாவட்டக் கூட்டுவுச் சமாசத்தின் ஆதரவில் தம்பலகமத்தில் நடைபெற்ற சர்வதேசக் கூட்டுறவுத் தின விழாவில் மேற்படி சமாசத்தலைவர் திரு. எம். கே. செல்வராசா பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்விழாவிற்குத் தலைமை வகித்த திருக்கோணமலை பிரதம கல்வி அதிகாரி திரு மதி R. S. பார்மர் பேசுகையில், ''நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஆண்களுடன் பெண்களும் சேர்ந்து உழைப்பது மிகவும் அவசியம். இதன் மூலமே நாட்டின் பொருளாதாரம், கலாச்சாரம் முதலியவற்றின் முன்னேற்றத்தை நாம் காணலாம்'' என்றார்.

''கூட்டுறவு இயக்கம் ஊழல்கள் இன்றி இயங்கினால் தான் மனித இனம் முன்னேற்றம் காண முடியும். எனவே ஊழல்களைக் களைய நேர்மையானவர்கள் உழைக்க வேண்டும்'' என கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. H. W. P. சந்திரசேகரா பேசுகையில் எடுத்துரைத்தார்.

மூதூர் முதலாவது நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப் M. E. H. முகமத் அலி உரையாற்றுகையில், ''விவசாயிகள் தாங்கள் பெற்ற விவசாயக்

[தொடர்ச்சி 12-ம் பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களா அல்லது ஒரு நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களா?

R. C. S. குக்

*தமிழில்:* **து. சீ.**

## இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்

அண்மைக்காலத்தில் சில நாடுகளில், அரசாங்கத்தின் கொள்கையைப் பின்பற்றி கிராமவாசிகளின் சகல சேவைக்காக ஒவ்வொரு கிராமத்திலும் அல்லது சில கிராமங்களுக்கு ஒன்றாகப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டன. ஒரு கிராமம் ஒரு சங்கம் என்ற இக் கொள்கை இந்தியாவிலும் இலங்கையிலும் அமுலுக்கு வந்துவிட்டது. கிழக்கு ஐரோப்பாவில் அநேக நாடுகளில் வெவ்வேறு ரூபத்தில் இத்தகைய சங்கங்கள் தொழிலாற்றுகின்றன. இவ்விரு தொகுதிகளையும் வெவ்வேறாக ஆராய்வது பயனுடைத்தாகும்.

ஐரோப்பிய இயக்கங்களைப் பின்பற்றி நிறுவப்பட்ட கூட்டுறவு இயக்கத்தின் மந்தமான வளர்ச்சியின் திருப்தியற்ற முன்னேற்றத்தாலும் விசேஷமாக தொலைவிலுள்ள கிராமங்களிலுள்ள பெருந் தொகையான சிறிய கூட்டுறவுத் தாபனங்களுக்குத் தேவையான தகுதி வாய்ந்த நேர்மையான முகாமையாளர் பெற்றுக்கொள்வதன் கஷ்டத்தினாலும் ஆசியாவில் புதிய கூட்டுறவுக் கொள்கை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. கிராமத்தின் எல்லாத் தேவைகளையும் ஒரு கூட்டுறவுச் சங்கம் பூர்த்தி செய்ய இயலுமானால் அல்லது அடுத்துள்ள கிராமங்கள் சேர்ந்து அதே கூட்டுறவுச் சங்கத்தை, தங்களது சகல தேவைகளுக்கும் உபயோகிக்க இயலுமானால் திற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைவாய்ந்த முழுநேரப் பணியாளரை அமர்த்திப் பெரிய வியாபாரஞ் செய்யக்கூடியதாகவிருக்கும். அதே சமயம் பரிசோதனையினதும் மேற்பார்வையினதும் தேவையும் குறைந்துவிடும்.

இக்கொள்கை இலங்கையில் ஓரளவுக்குச் சித்தியெய்தியிருக்கிறது. எப்படியாயினும் தனிநோக்குச் சங்கத்தின் இடத்தை அது பறித்துவிடவில்லை. விசேஷமாக விற்பனவை, பாவனைப் பொருள்களின் கூட்டுறவு வியாபாரத்தை அது அதிகம் அதிகரித்துவிடவில்லை. முதலாவதாக, வட்டார மொத்த விற்பனவுச் சங்கத்தைப்போன்ற அநேக பெரிய கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்படுவதும், இரண்டாவதாக, விவசாயப் பொருள்களாகக் கடன்கள் கூடுதலாகக் கொடுக்கப்படுவதுமே கண்ட பலாபலன்களாகும். இத்துறையில் பழைய நாணய சங்கம் பலநோக்குச் சங்கத்தினிடத்தை எடுத்திருந்ததெனச் சொல்லலாம்.

இலங்கையில் புதிய கொள்கை அரசியலுடனும், பொருளாதாரத்துடனும் சம்பந்தப்பட்டதாகும். பணியாற்றிவரும் சங்கங்கள் சாதாரணமாக நுகர்ச்சியாளர் சங்கங்களையும் விற்பனவுச் சங்கங்களையும் ஒன்று சேர்க்கப்பட்டனவாகும். கிட்டத்தட்ட எல்லாச் சங்கங்களும்—சில சுயேச்சையாகவும் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவை அச்சமயம் அரசாங்க நிதியிலிருந்து உற்பத்தியாளருக்கு முற்பணம் கொடுப்பதற்குத் தத்துவம் பெற்றிருந்தன. தமது நிதிக்குச் சேமிப்பில் தங்கியிருந்த பழைய நாணய சங்கங்கள் இத்திட்டத்தில் விடப்பட்டிருந்தன. நல்ல மேற்பார்வை, திறமையான முகாமை ஆகியவையுள்ள பலம் பொருந்திய கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதே நோக்கமாக இருந்தது. இது கிராம பரிபாலனம் செய்யக்கூடிய அளவுக்கு வளர்ச்சியடையுமென ஒருகாலத்தில் எண்ணப்பட்டது.

### கிழக்கு ஐரோப்பிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்

சோசலிச சோவியத் குடியரசில் 1930 வரையும் மற்றைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் 1948 வரையும் ஒருநோக்குள்ள பலம் பொருந்திய விவசாயக் கூட்டுறவுத் தாபனங்கள் தொழிற்பட்டு வந்தன. நாணயம், விற்பனை, பக்குவப்படுத்தல் ஆகிய ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் சிறுதொகையான கிராமப் பாவனையாளர் சங்கங்களும் தொழிற்பட்டு வந்தன. தனிப்பட்ட கமங்கள் அழிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்டு நிலம் பொது உடமையாக்கத் தீர்மானஞ்செய்யப்பட்டதும் இத்தகைய கூட்டுறவுச் சங்கங்கள் அழிக்கப்பட்டன. கூட்டுறவுக் கமங்கள் தேவையான பொருள்களை வாங்கியும், உற்பத்திப் பொருள்களை விற்றும் பணஉதவிக்கும் சேவைக்கும் அரசாங்கத்தை நாடுமென்றும் கருதப்பட்டது. கூட்டுக் கமத்தின் அங்கத்தவர்கள் கூட்டுறவுமூலம் பயன்படக் கூடியது நுகர்ச்சிப் பொருள்கள் மாத்திரமே. ஆகவே, இந்நாடுகளில் கூட்டுறவுக் கமங்களுடன் வீட்டுப் பாவனைப் பொருள்களை விற்பதற்குப் பாவனையாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கிராமத்திற்கு ஒன்றாக நிறுவும் திட்டம் இருந்தது.

சோசலிச சோவியத் குடியரசில் திட்டமிட்டவண்ணம் இம்முறை வேலைசெய்திருக்கிறது. கிழக்கு ஐரோப்பிய மற்றைய நாடுகளில் இம்முறையில் பெருமளவில் மாற்றங்களேற்பட்டிருக்கின்றன. போலந்திலும், யூகோசிலாவியாவிலும் கூட்டுக்கமம் உண்மையில் விருத்தியடையவில்லை. அது இப்பொழுது கைவிடப்பட்டு வருகிறதெனக் கூறிவிடலாம். கங்கேரியில் கூட்டுக்கமம் இன்று திருப்திகரமாக இல்லை. அங்கு முன்பு எவ்வளவு சிறிய கமங்கள் இருந்தனவோ, அத்தனை சிறிய கமங்கள் இன்றும் இருக்கின்றன. இவையாவும் பொருள்கள், தருவித்தல் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தல் ஆகிய சேவைகளுக்கும், மற்றைய சேவைகளுக்கும் கூட்டுறவு உதவியைநாடி நிற்கின்றன. கிராம நுகர்ச்சியாளர் சங்கங்களையும் வட்டாரச் சமாசங்களையும், பெருப்பித்துப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றியமைப்பதால் இத்தேவை பூர்த்தியாக்கப்பட்டிருக்கிறது. நுகர்ச்சி, விவசாயப் பொருள்கள் விநியோகம், விவசாய உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தல், விவசாய சேவை அளித்தல் ஆதிய சேவைகளை இச்சங்கங்கள் ஆற்றிவருகின்றன. இப் பலநோக்குச் சங்கங்களுடன் விசேட பணிபுரியும் சங்கங்கள் உரம், பால், பழம் ஆகியவற்றைப் பக்குவப்படுத்தும் சங்கங்கள், தொழிற்படுவதுடன் சிறிதுகாலம் பணியாற்றாது இருந்த விசேட நாணய சங்கங்களும் அநேக கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தொழிற்படுகின்றன.

மேலே கூறப்பட்டதிலிருந்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சார்பாக அல்லது அதற்கு மாறாக ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகக் காணப்படவில்லை. பலநோக்குக் கூட்டுறவுச் சங்

கங்களின் கொள்கைகளின் மேம்பாட்டிற்காக அல்லது பொருளாதார நன்மைக்காக அவை தோற்றுவிக்கப்படவில்லை. அநேக காரணங்களின் இடையீட்டால் தேசத்திற்குத் தேசம் ப. நோ. கூ. சங்கங்களின் தொழில்முறைகள் மாறுபாடடைகின்றன. இந்நிலையை ஏற்றுக்கொண்டபொழுதிலும் இம்முறைக் கூட்டுறவு இயக்கத்தின் முக்கிய நன்மைப்பாடுகளையும், குறைபாடுகளையும் அறிவது நன்மை பயப்பதாகும். அவை ப. நோ. கூ. சங்கங்களை நிறுவுவதற்கோ அன்றேல் அவற்றின் விருத்தியைக் குறைக்கவோ உதவியாக இருக்குமன்றோ!

**பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நன்மைப்பாடுகள்**

வியாபாரம் கூடுதலாகச் செய்யலாமென்றும், அதனால் இலாபம் கூடுவதனால் தகுதி வாய்ந்த முகாமையாளரை நியமிக்கலாமென்ற காரணம் இச்சங்கங்களுக்குச் சாதகமாக எடுத்துரைக்கப்படுகிறது. வியாபாரம் கூடுவது மாத்திரமல்லாமல் ஓர் ஆண்டில் நீண்டகாலத்திற்கும் அவ்வியாபாரத்தைக் கொண்டு நடத்தக்கூடியதாகவுமிருக்கிறது. இந்நிலை பணியாளரிடம் நல்ல மனோநிலையையும் பணிபுரிவதற்கு உற்சாகத்தையும் உண்டுபண்ணுவதுடன், அங்கத்தவர்கள் தங்கள் ஸ்தாபனம் தொடர்ந்து நடைமுறையிலிருக்கிறதென்ற எண்ணத்தையும் கொடுக்கிறது.

தனிநோக்கு நிறுவனத்தைக்காட்டிலும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முதலைச் சிக்கன முறையில் உபயோகிக்கக்கூடியது. சங்கத்தின் வாகனங்கள், கட்டிடங்கள் ஆதியனவற்றை வருடத்தில் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு உபயோகத்திற்கு உபயோகிக்கலாம். அங்கத்தவர்களுடைய உற்பத்திப் பொருள்களை புகையிரத நிலையத்திற்குக் கொண்டு செல்லும் லொறி, அங்கிருந்து வியாபாரத்திற்காய பொருள்களைக் கொண்டுவரலாம். இதற்கு நடைமுறையில் சில கஷ்டங்கள் இருக்கின்றன. இரண்டு போகத்தில்தான் ஒரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது எல்லாப் பகுதிகளும் வாகனங்கள், நிலம், பணியாளர்கள் ஆதியனவற்றை உபயோகிக்கக் கூடியமுறையில் இருக்கிறது.

கமங்களிலிருந்து வரும் அங்கத்தவர்கள் வீண் நேரம் போக்காதிருப்பதற்காக ஓர் இடத்திலேயே தங்கள் வியாபாரத்தைச் செய்ய விரும்புவர். தனித்தனி சங்கங்களாக இருப்பினும் தங்களுடைய தொழில் இடங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமித்து இருப்பின் இக் கஷ்டத்தை ஒருவாறு நீக்கலாம்.

ஒன்றுக்கு மேற்பட்ட நிருவாகசபைகளில் பணியாற்றுவதற்கு ஆட்கள் எடுப்பது கஷ்டம் எனச் சொல்லப்படுகிறது. இது அங்கத்தவர்களின் விருப்பத்தைப் பொறுத்தது. கூட்டங்கள் ஒரே நாளில் அடுத்தடுத்து வைப்பதனல் இக்கஷ்டத்தை ஒருவாறு தீர்க்கலாம்.

ஒரு கிராமத்தில் ஒரு சங்கமே சிக்கனத்தை உண்டு பண்ணவும், அரசாங்கத்தின் விவசாயக் கொள்கையை—கூடிய உற்பத்தி அல்லது நில உடமை மாற்றங்கள்—அறிவிக்கவும், செயற்படுத்தவும் வசதியாக இருக்கும் என்ற எண்ணம் பலரிடம் நிலவுகிறது. இது கூட்டுறவு சம்பந்தமற்ற அரசியற் கொள்கையாகும்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கடனை உடனடியாகத் திருப்பிச் செலுத்த வேண்டும். அப்பொழுதுதான் அரசாங்கம் மேலும் விவசாயிகளுக்கு கடனுதவி செய்யமுடியும்'' என்ருர்.

## சமயத்திருநாட்களைப்போல் கொண்டாடவும்

தீவுப்பகுதி கூட்டுறவுச் சங்கங்களின் ஆதரவில் புங்குடு தீவு ஸ்ரீகணேச வித்தியாசாலையில் கூட்டுறவுத் தினவிழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு திரு. க. செல்லத்துரை தலைமை வகித்தார். தீவுப்பகுதி ப. நோ. கூ. ச. சமாசத்தலைவர் திரு. ப. கதிரவேற்பிள்ளையினல் கூட்டுறவுக் கொடி ஏற்றிவைக்கப்பட்டது.

''சகல மதத்தவரும் தங்கள் தங்கள் புனிதத் திருநாட்களை எவ்விதம் வருடா வருடம் கொண்டாடி வருகின்றனரோ, அவ்வண்ணமே கூட்டுறவுத் தினவிழாவையும் வருடந்தோறும் எல்லோரும் சிறப்புடன் கொண்டாட வேண்டும்'' என வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் தனதிகாரியும், முன்னள் கூட்டுறவுக் காரியாலயப் பரிசோதகருமான திரு. மு. கணபதிப்பிள்ளை பேசுகையில் வலியுறுத்தினர். மேலும் அவர் உரையாற்றுகையில் கூட்டுறவு இயக்கத்தின் நோக்கங்கள், வளர்ச்சி ஆகியன பற்றி விளக்கியதுடன், நாட்டில் பொருளாதார நிலையும், சுகவாழ்வும் உயர்வடைவதற்கான கருத்துக்களை எடுத்துரைத்தார்.

திருவாளர்கள் V. கதிரவேற்பிள்ளை, V. V. நல்லதம்பி, நா. கார்த்திகேசு ஆகியோரும் உரையாற்றினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி மோகம்

எஸ். ரி. தம்பிராசா.

பதவி உயர்வு எப்போது கிட்டும் என்ற ஏக்கப் பெருமூச்சுடன் வாழுகின்றது இன்றைய மனிதகுலம் என்பதில் தவறில்லை. எதிர்பார்த்த பதவி கிடைத்துவிட்டால் போதும்; அட்டை போல ஒட்டிக்கொண்டு விடுகிறார்கள் சிலர். கடமையில் கருத்தைச் செலுத்தாமல், பதவி பறிபோகாமல் பாதுகாக்கவே அல்லும் பகலும் பாடுபடுவது. பிரசித்தம். சிலர் தியாக உணர்ச்சி என்பதை எள்ளளவும் சிந்திப்பதில்லை. இது இன்றைய கலியுலகக் காட்சியென்றால் சாலப் பொருந்தும்.

பண்டைக் காலத்தில் இடம்பெற்ற சம்பவமொன்று. இராமாயணத்தில் கைகேயியின் தீவினைப் படலத்தைத் தொடர்ந்து இராமன் அரச பதவியை இழந்து வனவாசம் புரிய முற்படுகின்றான். "மண்ணேகொள் நீ; மற்றைய தொன்றும் மற" என்று மன்னன் மன்றாடியும், கைகேயி விட்டுக் கொடுக்கவில்லை. அவள் தான் நினைத்ததைச் சாதித்து விடுகிறாள். இம்முடிவு இராமனுக்குத் தெரிவிக்கப்பட்டவுடன், இராமன் பொறாமை கொள்ளவில்லை, புளகாங்கிதமடைகிறான். "என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ" என்று கூறி, பரதன் ஆட்சிபுரியட்டும் என்று அரசைத் துறந்து விடுகிறான். இந்த உயரிய துறவு எம் உள்ளத்தை விட்டு என்றுமே அகல முடியாத ஒரு சம்பவமாகும்.

ஆனால் இதன் பின் நடந்ததென்ன?

இராமபிரான் வனவாசம் புறப்பட்டு விட்டார். பரதன் வந்து தந்தையின் ஈமக் கடன்களைப் புரிகிறான். அரசபீடம் பரதனுக்குத் தான் என்ற அரசரின் ஆக்ஞை தெரிவிக்கப்படுகிறது. பரதன் திணறுகிறான். "அண்ணன் இருக்கத் தம்பி அரசாள்வதா? இது அநியாயம்; இதற்கு நான் ஒருக்காலும் ஒப்பமாட்டேன்" என்று சீறுகிறான். இறுதியில் மூத்தோனை அழைத்து வந்து அரசபதவியை அவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுக்கே உரியதாக்குவேன் என்ற உறுதியுடன் இராமரைத் தேடிப் புறப்படுகிருன் பரதன். அரசபதவி சாதாரணமானதா? பெறுதற்கரிய பேறை தீவினை என வெறுக்கிருன். இத்தகைய தியாகம்பற்றி புறநானூறு கூறும் உண்மையொன்றைப் பார்ப்போம்:-

"ஈயென இரத்தல் இழிந்தன்று; அதன் எதிர்
ஈயேன் என்றல் அதனிலும் இழிந்தன்று
கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதன் எதிர்
கொள்ளேன் என்றல் அதனிலும் உயர்ந்தன்று"

தியாகத்தில் பரதன் இராமனைவிட உயர்ந்து விட்டான் என்று இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள முடிகிறதல்லவா!

பரதன் பரிவாரத்துடன் கங்கைக் கரையை நோக்கிச் செல்கிருன். அங்கு காவல் புரியும் குகன் தொலைவிலே படைபலத்துடன் யாரோ வருவதைக் கண்டு கொள்கிருன். கிட்ட நெருங்க நெருங்க, இவன் இராமபிரானின் சகோதரனைத் தான் இருக்கவேண்டும்; போர் புரிந்து அண்ணலை ஒழித்துவிடும் உத்தேசத்துடன்தான் படையெடுத்து வருகிருன்போலும் என்று கற்பனை செய்து கொள்ளுகிருன். தன் சகாக்களை உஷார்ப்படுத்தி விட்டு, வருகிற படையை எதிர்ப்பதெனத் திடசங்கற்பம் செய்து கொள்ளுகிருன். "ஆழநெடுந்திரை ஆறு கடந்திவர் போவாரோ?" என்று அறை கூவுகிருன். உயிரைத் தியாகம் புரிந்தும் இராமபிரானைக் காப்பேன் என்ற ஓர் உணர்ச்சி குகனுக்குப் பிறக்கிறது. பரதன் தன்னை மீறி அப்பால் போவதானல் "ஏழமை வேடன் இறந்திலன் என்றெனை ஏசாரோ?" என்று குகன் எண்ணிக் கடமை வீரனைக் காட்சியளிக்கிருன்.

ஆனல் இறுதியில் நிகழ்ந்ததென்ன? பரதன் பரிவாரங்களை நிறுத்திவிட்டு இராமநாமத்தை உச்சரித்தவாறு குகனை நெருங்குகின்றுன். அப்போது குகன் மனநிலை எப்படியிருந்திருக்கும் என்பதை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. மனதிலே சந்தேகம் குடி கொண்ட நிலையில் "எய்தியது என்னை?" என்று உசாவுகிருன் குகன். உடனே பரதன்,

"முழுதுலகளித்த தந்தை முந்தையோர் முறையினின்றும் வழுவினன் அதனை நீக்க மன்னனைக் கொணர்வான்....'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று விடை பகருகின்றான்.

குகன் தன் உள்ளத்தின் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாது விம்முகின்றான். பரதனைப் பற்றிக் கீழ்த்தரமான மனப்பான்மை அவனுள்ளத்தில் ஆரம்பத்தில் குடிகொண்டிருந்தது. இருளில் ஒளி பிறந்தாற்போன்று பரதனின் பவுத்திரமான தியாகம் அவனை வெகுவாகக் கவர்ந்து விட்டது. இரகு குலத்தின் தலைமகனுகப் பிறந்தாலன்றி கிடைக்காத பதவி அது. கைகேயியின் சாகசத்தால் தசரதரிடம் பெற்றுக் கொண்ட பதவி கனவிலும் கிட்டாத ஆட்சிபீடம். கிடைத்தற்கரிய இப்பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்து தன் தமையனைக் கூட்டிச் செல்ல வந்துள்ளான் பரதன். தியாகம் என்றால் இதுவல்லவோ தியாகம். இராமனும் தியாகம் செய்தான். பரதனும் தியாகம் புரிந்தான். இந்த இருவரில் யார் உயரிய தியாகம் புரிந்துள்ளார்கள் என்று குகன் உள்ளம் ஒரு கணம் எடை போட்டுப் பார்க்கிறது.

மறுகணம் மண்ணிலே வீழ்ந்து விம்மிக்கொண்டே,

"தாய் உரை கொண்டு தாதை
உதவிய தரணி தன்னைத்
தீவினை என்ன நீத்துச்
சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை என்ற போழ்து
புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழ்
ஆவரோ தெரியில் அம்மா!"

என்று வியப்புடன் கூறுகின்றான்.

பரதன் இராமனை விடத் தியாகத்தில் உயர்ந்துவிட்டான். ஆயிரம் இராமர் ஒன்று சேர்ந்தாலும் பரதனுக்கு இணையாக முடியாது. பரதனின் தியாகத்தைப் போற்றுதார் யாரோ! இத்தகைய தியாக சிந்தனையும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் எம்மிடையே மலிந்து காணப்படின் எத்தகைய பூசல்களையும் சுமுகமாகத் தீர்த்து விட முடியுமல்லவா? இந்நிலையை நாம் எய்தும் நாள் எந்நாளோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் வேகத்தில் உணவு உற்பத்தி

நிலப்பரப்பில் பெரிதான உலக நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இங்கு அரிசி, கோதுமை முதலான உணவு தானியங்கள் விளைவிக்கப் படுகின்ற பரப்பும் மிக அதிகமேயாகும். உழைப்பவர்க்கு வேண்டிய மனித சக்திக்கும் இங்கு ஒரு குறையுமில்லை. இந்தியாவிலுள்ள கிராம மக்களில் சுமார் 80 சத விகிதம்பேர் விவசாயத் தொழிலிலேயே ஈடுபட்டு வாழ்கிறார்கள். அப்படியிருந்தும், பெருகிவரும் இந்திய மக்கட் தொகைக்கு உணவூட்ட முடியாமல் உணவு தானியங்களுக்கு இறக்குமதியை நம்பி வாழும் நிலையில் நாம் இருக்கிறோம்.

இந்தியாவின் உணவுப் பற்றாக்குறைக்குப் பல காரணங்கள் உள. கிடைக்கும் மனித சக்தியையும், பிற வசதிகளையும் அறிவியல் ரீதியில் முறையாகப் பயன்படுத்திக்கொள்ளாமல் புராதனமான முறைகளையே நம் விவசாயிகள் பின்பற்றிவருவதும், வளர்ந்துவரும் நாடுகளில் ஏற்பட்டுள்ள விவசாய முன்னேற்றங்களை விரைவில் அறிந்து கடைப்பிடிக்கத் தயங்குவதும், விவசாயத் தொழிலின் முக்கியத்துவத்தை முழுதும் உணர்ந்து தொழில் ரீதியில் அதை நடாத்த நாம் முயற்சி மேற்கொள்ளாததும் ஒரு சில காரணங்களாம். நாம் கிடைக்கும் வசதிகளை முறையாகப் பயன்படுத்தி போர்வேகத்தில் அபிவிருத்தி வேலைகளை அறிவியல் ரீதியில் தொடங்கினால் மிகக் குறுகிய காலத்திற்குள் இன்றுள்ள உணவுப் பற்றாக்குறையை அகற்றிவிட முடியும்.

விவசாயத் தொழிலாளர்களில் பலர் கொஞ்சக் காலமாக அத்தொழிலை உதறிவிட்டுப் பிற தொழிலில் ஈடுபட ஆர்வங்காட்டி வருகிறார்கள். மிகப் பலர் தம் சொந்த இடங்களையேவிட்டு வெளியிடங்களிலும் சென்று கூலிவேலை செய்கிறார்கள். அவர்களுடைய உழைப்பு நம் நாட்டினை வளப்படுத்த உதவாமல் போவதோடு பிறநாடுகளில் அவர்கள் அடையும் அல்லல்களும் பலவாக இருக்கின்றன. வெளியிடம் சென்றவர்களையெல்லாம் திரும்பி வரச்செய்து அவர்களுக்கும் வாழ்வளிக்க வேண்டுமென்ற ஆசை நமக்கிருக்குமானால் அதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
No.



வும் நாம் போர் வேகத்தில் லாபகரமாக உணவு உற்பத்தி செய்வதென்ற குறிக்கோளுக்குப் பாடுபடவேண்டும். வருவாய்க்குறைவு காரணமாகத்தான் விவசாயிகள் வேறு தொழில்களை நாடுகிருர்கள் என்ருல் அந்நிலையை மாற்றுவதற்கு முதலில் நாம் திட்டமிடவேண்டும். உணவு உற்பத்தியைப் பெருக்குவதை ஒரு புனிதமான கடமையாக விவசாயிகள் கருதவும், அவர்கள் அதில் ஆர்வம் காட்டவும் தூண்டுவதாக அத்திட்டம் அமையவேண்டும். திறமைக்கும், உழைப்பிற்கும் ஏற்ற வருவாய் விவசாயத்தில் கிடைக்கவேண்டுமென்ருல் திருந்திய வித்துகள், உர உப்புக்கள், பூச்சி பூஞ்சாணங்கொல்லி மருந்துகள், விவசாய கருவிகள் முதலிய எந்த வசதியும் அவர்களுக்கு ஒரு குறைவுமின்றிக் கிடைக்க வழி செய்யவேண்டும். இந்த நோக்கத்தோடுதான் மாவட்ட ரீதியில் தீவிர விவசாயத் திட்டங்கள் குறிப்பிட்ட சில இடங்களில் தொடங்கப்பட்டன. அந்த முயற்சியில் வெற்றி கிடைத்ததனல் இன்று தீவிர விவசாயத் திட்டம் பல பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

புராதன முறைக்குப் பதிலாக நவீன விவசாய முறைகளைக் கடைப்பிடிக்கச் செய்தல் சொந்தத்தேவைகளுக்கு மட்டுமே விளைவித்துக்கொண்டுவரும் இந்திய விவசாயிகளிடம் வெளித்தேவைகளுக்கும் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற உணர்வையூட்டுதல், அதிக நிலப்பரப்பில் பயிர் செய்து அளவான வருவாயை ஈட்டுவதைவிட குறைந்த நிலப்பரப்பில் கூடுதலான உற்பத்தியை உண்டாக்கும் முறைகளை மேற்கொள்ளச்செய்தல் என்பன போன்ற வழிகளில் அதிக உணவு உற்பத்தி செய்ய வேண்டிய கட்டாயம் இன்று நமக்கு ஏற்பட்டிருக்கிறது. இதற்கெனக் கொண்டுவரும் எந்தத் திட்டமும் இந்திய விவசாயிகளின் சக்திக்கும் திறமைக்கும், சூழ்நிலைக்கும் ஏற்றதாகவும் இருக்கவேண்டும். போர் வேகத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்குதல் என்ற கொள்கைக்கு முதலில் புதிய விவசாயக் கருவிகளையும், நவீன முறைகளையும் விவசாயிகள் விவசாயத்தில் பயன்படுத்தும்படி புகுத்தவேண்டும்.

எந்தப் புதியமுறையையும் முக்கியமான பயிர் விஷயத்தில் பரவலாக எல்லா விவசாயிகளும் மேற்கொள்ளுமாறு செய்வது முதல் முக்கியமாகும்.

முக்கியமான பயிர்கள் விஷயத்தில் புதுமையைப் புகுத்துவதில் வெற்றி கண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டபின்பே மற்றப் பயிர்கள் விஷயத்திலும் அதனைச் சிபார்சு செய்யவேண்டும்.

விவசாயத் தொழிலில் ஈடுபடும் ஒவ்வொரு விவசாயியும் தன்னுடைய நிலத்தின் தன்மை, அதில் விளைவிப்பதற்கேற்ற பயிர்கள், அப்பயிர்களின் வேளாண்மை முறை ஆகியனபற்றி நல்ல அறிவு பெற்றிருக்கவேண்டும். அப்பயிர்கள் வேறெந்த மாநிலங்களில் அல்லது நாடுகளில் விளைவிக்கப்படுகின்றன என்பதும், அங்கு அப்பயிர்களில் அதிக அல்லது குறைவான மகசூலுக்குக் காரணங்களாக விளங்குபவைகள் என்னென்ன என்பதும் அவனுக்குத் தெரிந்திருக்கவேண்டும். குறிப்பிட்ட பயிரில் ஆராய்ச்சிகள், முன்னேற்றங்கள் என்னென்ன ஏற்பாடு வருகின்றன என்பதையும் அவன் அவ்வப்போது தெரிந்துகொள்ள வசதிகள் பெருகவேண்டும்.

இவை அனைத்திலும் மேலாக ஒவ்வொரு விவசாயியும் தான் செய்கின்ற தொழிலில் காண்கின்ற முன்னேற்றம் நாட்டின் பொருளாதாரச் செழிப்புக்கும், வாழ்வுக்கும் பெருந்துணை செய்யக்கூடியது என்பதை எந்த நாளும் பெருமிதத்தோடு நினைவிற்கொண்டு இடைவிடாது நிலத்தில் பாடுபடவேண்டும்.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தரமான வித்துக்கள் முதல் தேவையாகும். போதிய அளவு தரமான வித்துக்களை நாட்டில் உற்பத்திசெய்ய அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தரமில்லாத வித்துக்கள் விவசாயிகளிடம் விற்கப்பட்டுவிடாதபடி தடுக்கச் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கவும் இன்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு தானியப் பயிரிலும் உள்ளூர் ரகங்களைவிட அதிக விளைச்சலைத் தரக்கூடிய உயர்ந்த ரக வித்துக்களை உண்டாக்குவதில் விவசாய விஞ்ஞானிகள் ஒவ்வொருநாளும் கவனம் செலுத்தி வருகிறார்கள். அதிசயமான பெரும் பலனைத் தரக்கூடிய இருபிறவி வித்துக்கள் இன்று ஒவ்வொரு தானியத்திற்கும் உண்டாக்கப்பெற்றிருக்கின்றன. இவ்வித்துக்கள் சுவையும், பருமனுமுள்ள தானிய மணிகளை அதிக அளவில் குறுகிய காலத்தில் தரக்கூடியன. இருபிறவி வித்துக்களிலிருந்து உண்டாக்கப்பட்ட பயிர்கள் பலவித நோய்த் தாக்குதல்களைச் சமாளித்து வளரும்படியும் வழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உள்ளூர் ரகங்களைவிடப் பன்மடங்கு மகசூல் தரக்கூடிய இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரகங்களின் வித்துக்கள் விவசாயிகளுக்கு உதவி வருகின்றன. அரிசியில் தைச்சுங் நேட்டிவ்-1, ஐ. ஆர்-8 முதலிய நெல் ரகங்கள் அதிசயிக்கத்தக்கதான மகசூலைத் தருகின்றன. அதுபோல சோளம், மங்காச்சோளம், கோதுமை முதலிய எல்லாத் தானியங்களிலும் மிதமிஞ்சிய மகசூலைத் தரக்கூடிய இருபிறவி இனங்கள் உண்டாக்கப்பெற்று இன்று விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இவ்வித அதிக மகசூல்தரும் ரகங்களை எல்லா விவசாயிகளுமே பயிரிடத் தொடங்கினால் உணவு உற்பத்திப் பெருக்கம் சுலபமாகிவிடும்.

எல்லா வசதிகளும் இருந்தாலும் விவசாயத்திற்கு இன்றியமையாத தேவை தண்ணீர் வசதியாகும். தண்ணீர் வசதியில்லாத இடங்களில் நிலமும், பிற வசதிகளும் இருந்து என்னவது என்ற கேள்வி எழலாம். தண்ணீர் ஊற்று இல்லாத நிலப்பரப்பு நாட்டில் அதிகமிராது. நிலத்தை அகழ்ந்துகொண்டே போனால் முதலில் நீரும், பிறகு நிலக்கரியும், பின்னர் வைரமும் தந்து ஆதரிப்பவள் நம் நிலஅன்னை. ஆகவே ஆறு, குளம் முதலிய நீர் வசதிகளில்லாத இடங்களில் குழாய்க் கிணறுகளை இறக்கித் தண்ணீர் கொண்டுவர முயற்சி செய்யவேண்டும். எங்கும் குழாய்க் கிணறுகள் தோண்டி வேண்டிய தண்ணீரை வெளிக்கொண்டுவந்து விவசாயச் செழிப்பையுண்டாக்கப் போர்வேக முயற்சியை மேற்கொள்ளவேண்டும் என்பதுதான் இந்தக் கட்டுரையின் விரிவும், சுருக்கமும், மையமுமாகும். நாட்டின் பிற்போக்கு நிலைமையை உணர்ந்து ஒவ்வொரு விவசாயியும் நிலத்தில் உள்ளிருக்கும் நீரை வெளிக்கொண்டு வர உழைத்தால் நம் நாட்டின் உணவுப் பற்றுக்குறை நொடிப்பொழுதில் அகன்று விடும்.

—கூட்டுறவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளைக் கண்டீரா ?

— மு. ஆழ்வார்ப்பிள்ளை

ஆஸ்திகர் : கடவுளைக் கண்டீரா ?

நாஸ்திகர் : என்ன அண்ணை ! கடவுளையும் காணமுடியுமா ? கண்டால் எனக்குத் தேவையான எல்லாவற்றையும் பிடித்த பிடியிலே வாங்கி இருப்பேன்.

ஆ. கடவுள் ஓர் மனிதனே அப்பா

நா. அப்ப ! கடவுள் என்றால் என்ன ?

ஆ. எங்கும் நிறைந்த எல்லாம் அறிந்த எல்லாம் வல்ல ஒரு சக்தி அவர்.

நா. எங்கும் நிறைந்த கடவுள் என்கிறீர்களே, அப்படியானல் எமக்குத் தெரியாமல் எப்படி எப்படி இருக்க முடியும்.

ஆ. அப்படியானல், ஒருவரும் கடவுளைக் கண்டதில்லையோ.

நாஸ். கண்டதேயில்லை. நீங்கள் கண்டிருக்கிறீர்களா ?

ஆஸ். நான் மட்டுமல்ல, நீங்கள் எல்லாரும்தான் காணுகிறீர்கள். நீர் மின்சாரத்தைக் கண்டிருக்கிறீரோ?

நா. ஆம், ஆம் அதுதானே பட்டினமெல்லாம் பளிச் பளிச் சென்று மின்னுகிறது. மழைவந்தால் இடித்து முழங்கிக் கொட்டுகிறது.

ஆ. அது மின்சார வெளிச்சமல்லோ அப்பா ! மின்சார சக்தியைக் கண்டீரா ?

நா. அதைக் கண்ணல் காணமுடியுமா ! அப்படியொரு சக்தியிருக்கிறதென்பதற்கு ஆதாரமுண்டு. அதைக் கொண்டுதான் மின்சாரத்தைக் காணுகிறோம் அறிவால், கண்ணலல்ல.

ஆ. நீ ஒருமரத்தைக் கண்டிருக்கிறயா ?

நா. ஆமாம், ஒன்றல்ல, எத்தனையோ விதம் விதமான மரங்களைக் கண்டிருக்கிறேன்.

ஆ. மரங்கள் நேரே செங்குத்தாய் இருக்கின்றனவா ?

நா. இல்லையே ! அதேன் அண்ணை ?

ஆ. ஏனே தெரியாது. அம்மரங்கள் ஏனே விழுந்து போவதில்லை.

நா. அவைகள் மற்றைய பக்கத்தில் ஆழத்தில் வேரோடித் தூங்கி நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. இப்படி வேரோடவேணுமென்ற இவ்வளவு புத்தி மரத்துக்குண்டா.

நா. இல்லை! இல்லை. அது இயற்கை.

ஆ. ஆமாம், இயற்கையென்றுதான் சொல்லுகிறோம். இதற்கு இத்தனைபேர் இவ்வளவு ஆழத்திற்கு இன்ன திசையில் ஓடவேண்டுமென்ற கணிதமெல்லாம் கற்பித்தது யார்?

நா. அதுதானாக ஏற்படுகிறது.

ஆ. தானாக நடப்பதைத் தவறவிடாமல் நடக்கப்பண்ணிக்கொண்டு ஒரு சக்தியிருக்கிறதல்லவா. இந்த வேருக்கு எங்குதடை ஏற்பட்டாலும் உடனே ஒரு பதில் வேருண்டாக்கி விஷயத்தைப் பூர்த்திசெய்கிற அவ்வளவு அறிவு இயற்கைக் குண்டா.

நா. ஆம். அது அப்படிப்பட்ட சக்திதான் எத்தனையோ எத்தனையோ நூதனமான வேலைகளையெல்லாம் செய்கிறது. மரத்தின் தேவைக்கு ஆழத்திலுள்ள தண்ணீரைக் கூட இழுத்துக் கொடுக்கிறது.

ஆ. மரத்தின் ஒவ்வொரு பகுதியிலிருந்து ஒவ்வொரு வேலையையும் இதுதானே செய்கிறது.

நா. ஆமாம்.

ஆ. மரத்தின் நலனுக்கு ஆகவேண்டிய எல்லாவற்றையும் கவனிக்கிறதல்லவா.

நா. ஆமாம்,

ஆ. இதை மிஞ்சிய சக்தியும் உலகில் ஏதும் உண்டா?

நா. இல்லவே இல்லை. அழிப்பதும் ஆக்குவதும் காப்பதும் இச்சக்திதான்.

ஆ. இது எங்கும் உண்டு, இது இருக்குமிடத்திலுள்ள எல்லா விஷயத்தையும் உணரும். எல்லாவற்றையும் செய்யும், இப்படியான சக்தியல்லவா?

நா. ஆம், நீங்கள் சொல்வது சரிதான்.

ஆ. இதுதானப்பா கடவுள்.

நா. இதைத்தான் கடவுள் என்றால் மின்சாரத்தைக் காண்பதுபோல் இதை என்னுடம்பிற்குள்ளேயே காணுகிறேனே, எங்கும் காணுகிறேனே எப்பொழுதும் காணுகிறேனே.

ஆ. இப்பொழுது கடவுளைக் கண்டாயோ?

நா. கடவுளைக் காணாதாரே இல்லையப்பா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்ணொடு பாடும் தேவாரப் பாமாலை

பண்டித வித்துவான் M. V. பாலசுந்தரம், B. O. L., F. R. A. S.

சின்னஞ்சிறு பிராயத்திலிருந்தே, எனக்குத் தேவாரம் என்றால், மிகவும் பிரியம். இன்பந்தரும் அதன் இன்னிசை என்னுடைய மனத்தை மிகவும் கவரும். திருவிழாக்காலங்களில் இரவில் மூர்த்திகள் உலாவரும்போது நான் எனது பாட்டனாரோடு வெகுநேரம் கண் விழித்திருந்து, தேவாரப் பாமாலையின் இன்னிசையில் ஈடுபட்டிருப்பேன். ஓரளவு பருவ வயது வந்தபின்னர் தேவார இசையினால் ஏற்படும் இன்பத்துடன் அதன் சாகித்தியமும் எனது மனத்தைத் தொட்டு, அதைப் பக்தியில் ஈடுபாடடையச் செய்யலாயிற்று.

மேலான இன்பம் தரும் தேவாரப்பண்களை, சிறிது ஆராய்வாம்:

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம், கல்லாடம், தண்டியலங்காரம், இசை மரபுடையார் முதலிய நூல்களில், பழந்தமிழ் மக்களுடைய இசைக்கலையின் சீரிய இலக்கண இலக்கியச் சிறப்புகள் நிறையப் பொதிந்திருக்கின்றன. சிலப்பதிகாரக் காதையின் காலத்திலே, ஈரேழ்தொடுத்த செம்முறைக் கேள்வி, எனக் குறிப்பிடப்பட்ட, பதினான்கு நரம்புடையதாகிய சகோடயாழ், என்னும் இசைக் கருவி, மிக விசேடமானதென வருணிக்கப்பட்டிருக்கிறது. அந்த யாழில், செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை முதலிய ஏழுவகையான மேளங்கள் எழுந்தனவென்று அறிகின்றோம்.

சுத்தமான கர்நாடக சங்கீதத்திலும், இரு வீணைகளின் உதவியால், சுரத்தானங்கள் நிர்ணயமாயின என்பதை, இசை இலக்கண வடமொழி நூல்களில் காண்கிறோம். இந்தச் சுரங்களின் நியதியான சேர்க்கையால், கிராமம், மூர்ச்சனை ஆகியவற்றிலிருந்து, ஜாதிகள் என்ற தற்காலத்துள்ள இராகங்கள் எண்ணிக்கையில்லாதவாறு உண்டாயின.

இதே போல், மேலே சொன்ன, செம்பாலை, படுமலைப்பாலை முதலிய ஏழு வகை மேளங்களிலிருந்தும், எண்ணில்லாதனவாகிய பண்கள் உண்டாயின என்று கூறலாம். பண்கள் என்பவை, தற்காலத்தில் இராகங்களுக்கு நிகரானவை என்றே கூறவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னிசை பயக்கும் இசையின் சரித்திரத்தில், முதன் முதலில் ஐந்து சுரங்கள் கொண்ட இராகங்கள் உலகில் வழங்கினவென்றும், பிறகு ஆராய்ச்சியின் விளைவாக ஏழுசுரங்களுள்ள சம்பூரண இராகங்கள் ஏற்பட்டனவென்றும் கூறுவார்கள். பண்டைக்காலத் தமிழரின் இசை முறையில், ஐந்து வகையான சுரங்களாலான இசை, திறம் எனவும் ஏழுவகையான சுரங்களுள்ள இசை, பண் எனவும் வழங்கின என்ப. நாளடைவில் இசைவழி முன்னேற முன்னேற, பாலையாழ்த் திறங்கள், மருதயாழ்த் திறங்கள், செவ்வழியாழ்த் திறங்கள் என்பதாக, மொத்தம் நூற்றிமூன்று இசை வடிவங்கள் உண்டாகிப் பிறந்தனவாம். பிற்காலத்தில் அவற்றைப் பண்கள், திறங்கள், பண்ணியல் — திறங்கள் என்ற பாகுபாடுகள் இல்லாமல், நூற்றி மூன்று பண்கள் என்றே குறிப்பிட்டு வழங்கலாயினர்.

தேச சரித்திரத்தில், அவ்வப்போது பிரசாரத்திலிருக்கும் பௌதிக தத்துவங்கள், இன்னிசை நுணுக்கங்கள் முதலிய நாகரிகச் சின்னங்கள் பல, பழைய சம்பிரதாயங்களோடு கலந்து கொள்ளுவது உலக வழக்கம். இதேபோலப், பண்முறையும், தற்போதுள்ள சம்பிரதாயத்துடன் ஒன்ருகக் கலந்துவிட்டது என்று கூறலாம். ஆயினும் தேவாரங்களில் மாத்திரம் பண்முறை நிலைத்திருந்து வந்திருக்கின்றது. தேவாரங்கள், பண்முறையை அனுசரித்துப் பாடப்பட்டவை என்பதற்குத் தகுந்ததொரு சான்று காண்க.

"மண் பொருந்தி வாழ்பவர்க்கும் மாதீர்த்த வேதியர்க்கும், விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேருய் நின்ருனே; பண்பொருந்த இசைபாடும் பழஞ்சேர் அப்பனை கண் பொருந்து போதத்தும் கைவிட நான் கடவேனே" இது திருஞான சம்பந்தர் வாக்கு ஆகும். அப்பர் உமா தேவியாரை "பண்ணினேர் மொழியாள்" என அழைக்கின்ருர்.

இவ்வகையான இனிய பண்கள் இப்போது கிட்டத்தட்ட இருபத்தெட்டே உள்ளவை. இவற்றை சம்பிரதாயப்படி தொன்று தொட்டுப் பாடிவரும் தேவாரங்களிலும், வைணவ இசைப் பாக்களான திருவாய்மொழியிலும் காணலாம். தேவாரப் பாக்களுக்குரிய பண்களைப் பெரிதும் ஒத்திருக்கும் இராகங்கள் பல கர்ணடக சங்கீதத்திலிருக்கின்றன. இவற்றிற்குச் சில உதாரணங்களை ஈண்டுத் தருதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவாரப் பாமாலைகளுக்குரிய பண்:- கர்னாடக ராகம்**

நட்ட பாடை—நாட்டை, நாட்டக் குறிஞ்சி
தக்கராகம், தக்கேசி—காம்போதி
மேகராகக் குறிஞ்சி—நீலாம்பரி
நட்டராகம், சாதாரி—பந்துவராளி
விழாழக் குறிஞ்சி—சௌஸ்ராட்டிரம், சக்கரவாகம்
இந்தளம், சீகாமரம்—நாதநாமக்கிரியா
புறநீர்மை—பூபாளம்
செந்துருத்தி—மத்தியமாவதி
காந்தாரம்
கொல்லி
கொல்லிக் கௌவாணம் } நவரோஸ்

தற்காலத்தில் வழங்கும் சில பாட்டுக்களில் இராகத்தின் பெயரையும் அமைத்து இயற்றியிருப்பதைக் காண்கின்றோம். இந்த உத்தியை, திருநாவுக்கரசநாயனார் அவர்கள், "கல்லினால் எறிந்தும்" என்று தொடங்கும் நேரிசையில், "கொல்லியாம் பண்ணமைத்தார் குறுக்கை வீரட்டனாரே" என்று பண்ணின் பெயரையே அமைத்துப் பாடி முடிக்கின்றார்.

இன்னோரிடத்தில் கூறியதையுங் காண்க:—

"விளைவறியாமையாலே வேதனைக் குழியிலாழ்ந்து கலைகளுமில்லே னெந்தாய் காமரன் கற்றுமில்லேன்" என்று கூறுகின்றார். காமரன் என்பது சீகாமரம். தேவாரப் பண்களைப் பாடும் முறை பற்றி, ஒருவார்த்தை. தேவாரம் என்பது தமிழ்மறை: வேதத்துக்கு நிகரானது. வேதபாராயனத்தைப் போலவே, தேவாரமும், ஒரு நியதியான முறையில் போதிக்கப்பட்டு வந்திருக்கிறது. வழிவழியாக அதைப் பயிலுகின்றார்கள்: ஓதுகின்றார்கள். சில பண்புகளுக்கு நிகரான கர்னாடக இராகங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும், சில பண்களில் அன்னிய சுரச்சேர்க்கையும் புலப்படுகிறது. அது ஒரு பெரும் குற்றமல்ல. ஒருக்கால் அது, பரம்பரையால் வந்த அந்தப் பண்ணின் விசேட அம்சமாக இருக்கலாம். பல பண்களின் அடுக்கடுக்கான விஷயங்கள் நிறைந்த சங்கதிகள்போன்ற சஞ்சாரங்கள் தாளக் கட்டுடன் அமைந்திருக்கின்றன. ஆகையால், தேவாரப் பாவினத்தைப் பாடும்போது தற்காலத்தைய இன்னிசை இலக்கணங்களின்படி அவற்றைத் திருத்தாமல், பெரியோர் கையாண்டு ஒழுகிவந்த முறையின்படி பாடுவதுதான் சாலச் சிறந்ததென்றாகும். அறிவில் மேம்பட்டவர்களும், உயரிய பாடகர்களும், ஓதுபவர்களும் இதை ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நம்புகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு விற்பனவு எதற்காகத் தேவை?

"கூட்டுறவாளன்"

சின்னச் செயலாளராக விவசாயிகள் இருக்கிறபடியால்.

உற்பத்திப் பொருள் குறித்த காலங்களுக்கு மட்டுமே உற்பத்தி செய்யலாம். விரைவில் பழுதடையக் கூடும்.

சிறு விவசாயிகளுக்கு அனுபவமும், அறிவும் குறைவாக இருப்பதனுலும்.

பொருள் சேகரிப்பதிலும் பண்படுத்துதலிலும் ஏற்றுமதி செய்வதிலுைம் வசதிக் குறைவுகள்.

உற்பத்திற்குப் பணத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக.

அறுவடை காலம் மட்டும் வாழ்க்கைச் செலவினங்களை நடாத்திப் பணம் தேவைப்படுவதாலும்.

உற்பத்தியைத் தேவைக்கேற்றவாறு கட்டுப்பாடு செய்யக் கஷ்டங்கள் இருக்கிறபடியாலும்.

எல்லாப் பாகங்களிலும் பரந்திருக்கின்ற செயலாளர் விலைவாசி விபரங்களை அறியாமல் கஷ்டப்படுவதனுலும்.

சந்தைக்கேற்றவாறு தேவைப்படும் பொருள்களை உற்பத்தி செய்ய இலக்கியம் வழங்குவதற்காகவும் அல்லது அறிவூட்டுவதற்காகவும்.

ஒழுங்கற்ற முறையில் உற்பத்தியில் ஈடுபடுவதால் உள்ள அபாயங்கள்.

கமக்காரருக்குள்ளேயே போட்டி ஏற்படும்.

நிரந்தரமான விலைபேசிக் கொடுக்க முடியாது. ஒவ்வோர் கமக்காரனும் தத்தம் பொருள்களுக்குக் கூடின விலையைப் பெறுவதற்கு வாதாட முடியும்.

கழிவும், நட்டமும் அதிகமாக இருக்கும் உற்பத்திக்கும் விற்பனைக்கும் இடையில் தொடர்பு ஒன்றும் இல்லாதபடியால் விற்பனைச் செலவுகளும் அதிகமாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கூட்டுறவு விற்பனை முறையில் விற்பனவு செய்வதால் ஏற்படும் நன்மைகள்.**

ஒன்றுபட்டுத் திறமான விலையைப் பெறமுடியும்.

விற்பனவுச் செலவுகள் குறைவு— மொத்தமாக விற்பனவு செய்வதால் உள்ள முழு நன்மைகளும் சங்கத்திற்கு வரக்கூடும்.

உற்பத்தியையும் விற்பனவையும் ஒருங்கு சேர்த்து தொடர்பு ஏற்படுத்த முடியும்.

சந்தைக்கு அனுப்பப்படும் பொருள்களைக் கட்டுப்படுத்தமுடியும்.

விவசாயிகளின் உடனடித் தேவைகளுக்கு முற்பணம் கொடுத்து விலைவாசிகள் உயரும் பொழுது விற்பனை செய்ய உதவியளிக்கலாம்.

அங்கத்தவர்களுக்கு விற்பனவு உற்பத்தி முறைகளையிட்டு புத்திமதிகள் கூறலாம்.

மொத்த விற்பனவால் ஏற்படும் நன்மைகளில் முக்கியமாகச் சேகரித்தல், தரம் வகித்தல், பதன்படுத்தல், ஏற்றுமதி செய்தல் முதலியனவற்றை எல்லாம் கமக்காரனே அனுபவிக்க முடியும்.

**கூட்டுறவு விற்பனவு முறையைக் கையாளுதல் எப்படி?**

ஒன்றுபட்டு விற்க விரும்புவோர் (பிரதானமாக விவசாயிகள்) ஒரு சங்கமாகத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளல்.

தேவைப்படும் பணநிதிகளைப் பங்குகளாகவும், அரசாங்கத்திடம் இருந்து கடனைவும் பெற்றுக்கொள்ளுதல்.

அங்கத்தவர் தங்கள் உற்பத்திப் பொருள்களை சங்கத்திற்குக் கொடுப்பார்கள்.

சங்கம் பொருளைத் தரப்படுத்தி மதிப்பு விலையின் தோற்றத்தில் ஒரு விகிதத்தை முற்பணமாகக் கொடுக்கும்.

அங்கத்தவருடைய பொருள்கள் ஒன்ருக்கப்படுகின்றது.

சங்கம் பொருள்களைப் பதன்படுத்துகின்றது.

பொருள்களையும், உபபொருள்களையும் திறமான விலைக்கு ஏற்ற தருணத்தில் விற்றுக் கொடுக்கிறது— உத்தரவாத விலைத்திட்டத்தின்படி விற்க வேண்டிய பொருள்களை இப்படி விற்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சங்கம் செலவிற்கு ஒரு வீத பணத்தைக் கொமிசனுக்க் கழித்துக் கொள்ளும்.*

*ஒவ்வொரு தரப்படுத்தப்பட்ட ஒவ்வொரு மொத்தத் தொகைக்கு ஒரு குறித்த காலத்திற்குப் பெற்ற விலைகளின் சராசரியைக் கொடுக்கலாம்.*

*அங்கத்தவருக்கு முற்பணத்தைக் கழித்துக் கொண்டு மிகுதிப் பணத்தைக் கொடுக்கலாம்.*

ஒரு கூட்டுறவு விற்பனவுச் சங்கம் ஸ்தாபிக்க முன்பாகப் பின்வரும் விபரங்களை ஒட்டி ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

*பொருளாதாரத் தேவை ஒன்று பூர்த்தி செய்வதற்கு அப்பகுதியில் இருக்கிறதா? இப்பொழுது என்ன வகையான சேவை வேறொரு பகுதியார் செய்து வருகிறார்கள். அது நேர்மையானதாகவும் நம்பிக்கை உள்ளதாகவும் இருக்கிறதா? அது அடையும் இலாபம் கூடுதலாக இருக்கிறதா? கமக்காரர் அடையும் நன்மைகளில் ஏதும் குற்றங்கள் காணக்கூடியதாய் இருக்கிறதா?*

*ஒரு கூட்டுறவுச் சங்கம் திறமையாகச் சேவை செய்ய முடியுமா? உதாரணமாக உற்பத்திப் பொருளுக்கு ஏற்ற சந்தைகள் இருக்கின்றனவா? என்ன வகையாகக் கூடிய இலாபத்தைப் பெற்றுக் கொடுக்க முடியும்? உங்கள் சேவையைப் பார்க்கிலும் திறம்பட நடாத்த எத்தனிப்பதால் பண நிதிகளினலும், கால தாமதங்களினலும் பிரயாசத்தினலும் இந்தச் சேவையை திறமாகச் செய்ய முடியுமா? அது பலனைக் கொடுக்குமா?*

*போதியளவு வியாபாரம் இருக்கின்றதா? சங்க எல்லையும், பொருள் உற்பத்தி செய்யும் எல்லையும் சமமாக இருக்க வேண்டும்.*

*போதியளவு உற்பத்தியாளர்கள் சங்கத்தில் ஊக்கம் செலுத்துவார்களா? சங்கம் ஏறக்குறைய உற்பத்தி செய்யும் பொருள்களில் 75% பெறக் கூடியதாக இருக்கவேண்டும்.*

*சங்கத்திற்கு ஏற்ற பண நிதிகளை ஒழுங்கு செய்ய முடியுமா? நட்டம் வருமானல் பிற இடங்களில் பெற்ற கடனில் அதிகம் தங்கி இருக்கக் கூடாது. அங்கத்தவர்களே முதலைப்போடவேண்டும். இப்படி இவர்களுக்குச் செலுத்த முடியுமா?*

*சேவை மனப்பான்மை உள்ள திறமான நிருவாகிகளை அப்பகுதியில் காண*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியுமா? பொறுப்பேற்று ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்காக நேரத்தையும் தங்கள் சிரமத்தையும் கொடுப்பார்களா?

ஒற்றுமையாய் அப்பகுதியினர் வாழ்கின்றனரா? வேற்றுமைகள், விளைவுகள், பிரிவினைகள் நிறைந்த சமூகத்தில் கூட்டுறவு ஸ்தாபனம் வளர்ச்சியடைவது நம்பிக்கையற்றதாக இருக்கும்.

அப்பகுதியில் இருப்பவர்கள் நிரந்தரவாசிகளோ? சங்கத்திலே சேரும் பெரும்பாலோர் நிரந்தரமற்றவர்களாக இருந்தால் சங்கத்திற்குப் போதிய ஆதரவு பெற முடியாது.

## விற்பனவுச் சங்கங்களின் கொள்கைகள்.

அங்கத்தவரைத் தெரிந்தெடுப்பது.

ஒரு வகைப் பொருளில் விசேட கவனம் செலுத்துதல்.

ஜனநாயக நிருவாகம்.

உள்ள செலவுடன் சேவை புரிவது.

ஆதாயத்திற் கேற்றவாறு இலாபம் பகிர்தல்.

நட்டம் வரக்கூடிய முறையில் ஈடுபடுவதில்லை.

அரசியல் சமய விடயங்களில் நடுவு நிலைமை.

அங்கத்தவர்கட்கு இலக்கியம், நிபுணத்துவம் வாய்ந்த புத்திமதிகள் கூறல்

விற்பனவுத் தாபனங்களையும், முறைகளையும் சொந்தமாக்கிக் கொள்ளுதல். அல்லது தங்கள் அதிகாரத்திற்குள்ளே கொண்டுவருதல்,

வியாபார ஒப்பந்தங்கள் அங்கத்தவர்களுடன் எழுதிக் கொள்ளுதல்.

## உத்தரவாத விலைத்திட்டம்.

அரசாங்கம் விவசாயிகளுக்கு 1947ம் ஆண்டு உத்தரவாத விலைத்திட்டத்தைப் பற்றிக் கூறினர்கள்.

இத்திட்டத்தின் நோக்கங்கள் கமக்காரனது விளைபொருளுக்குத் தகுந்த விலையையும், உடனடியாக விற்பனைக்குத் தேவையான இடத்தையும் உறுதிப்படுத்துகின்றது.

தேசமக்களது உபயோகத்தில் இருக்கும் உணவுப் பொருள்களை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு உற்சாகம் ஊட்டுகின்றது.

இதனுல் இறக்குமதி செய்யும் உணவுப் பொருள்களுக்குப் பதிலாக உள்நாட்டில் உற்பத்தி செய்யும் பொருள்களைக் கையாண்டு சுயதேவைப் பூர்த்திக்கு வழி தேடும் அந்த நீண்டகால லட்சியத்தை அடையும் வண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Ser...
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.......

கவியரசர் தாகூரின் பூங்காவில்

# நிலையிலி

"காரவைக் கபூர்"

ஆருட்டுத்தனமாக நீ புரண்டடித் தோடிக்கொண்டிருக்கிறாய்! நித்திய பதிதா! உன் உருவமற்ற பாய்ச்சலைச் சுற்றிவளைத்து அசைவற்ற காலம் சுழலும் ஒளிக்குமிழ்களாய்க் குமுறி நிற்கிறது.

தன் எல்லையற்ற ஏகாந்தத்திற்கப்பால் இருந்து உன்னை அழைக்கும் அன்பனுக்கு உன் இருதயம் அர்ப்பணமாகி விட்டதா? உன் சிக்கடைந்த கூந்தற் சுருள்கள் கொந்தளிப்பான கோலாகலத்திற் சுழன்றோடுவதற்கும், அறுந்துபோன ஓர் ஆரத்திலிருந்து உருண்டோடுவதுபோல் நெருப்புப் போன்ற உன் மனவெழுச்சியின் முத்துக்கள் உருண்டோடுவதற்கும், உன்னுடைய அவசரத்தின் நெருக்கிடை ஒன்றேதான் காரணமா?

பயனற்ற சகலதையும் புறத்தே தள்ளி உன் விரைந்தோடும் அடிகள் இப் பூவுலகின் மணலை முத்தி இன்பத்திலாழ்த்தி விடுகின்றன. உன் நர்த்தன உறுப்புகளிலிருந்தெழுந்த புயல் தெய்வீகமான மரண வருஷிப்பை வாழ்க்கையின் மேற் குலுக்கி, அவளின் வளர்ச்சிக்குப் புத்துயிர் அளிக்கிறது.

நீ மட்டும் எதிர்பாராத களைப்பினால் ஒரு கண நேரம் நின்றுவிட்டால், உலகம் 'கட கட' வென்று தன் முன்னேற்றத்தையே தடுத்து நிற்கும் ஒரு குவியலாய், ஒரு தடங்கலாகிவிடும். மிகவும் சிறிய தூசியின் அணுவுங் கூட ஆகாயத்தை அதன் எல்லையற்ற விடங்களில் எல்லாம் தடுக்கமுடியாத அழுத்தலுடன் ஊடுருவிச் செல்லும்.

ஒளிச் சதங்கைகள் சுற்றிக்குலுங்கும் இந்தக் கண்காண அடிகளின் சீர்ப்பிரமாணத்தினால் என் எண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணங்கள் உற்சாகமடைகின்றன. அவை என் இருதயத்துடிப்பில் எதிரொலித்து என் இரத்தத்திடை பூர்வீக ஆழியின் பக்தி கீதத்தைப் பொங்கவைக்கிறது.

பேரிரைச்சலுடன் பாய்ந்து வரும் வெள்ளம் என் வாழ்க்கையை உலகத்திற்குலகம், உருவத்திற்குருவம் எத்தித் தூக்கி எறிந்து என் ஜீவனைத் துன்பங்களிடையும், கீதங்களிடையும் முடிவற்ற பரிசுத்த தனையாய் சிதற அடிப்பதைக் கேட்கிறேன்.

வெள்ளம் பெருகிறது! காற்று வீசியடிக்கிறது! படகு உன் சொந்த ஆவலைப் போல் நர்த்தனம் புரிகிறது– இருதயமே!

தேட்டங்களைக் கரையிலேயே விட்டுவிட்டு, ஆழம் கண்டறிய முடியாத இருளிடையே படகில்வரையறுக்க முடியாத ஒளியைத் தேடிப் பிரயாணம் செய்!

ஆ! என்னிடை ஓர் இரகசியம் பொதிந்திருக்குமாயின் – கோடை முகில்களின் பொழியப் பெருத மழை போல், மோனத்தில் மூடப்பட்ட இரகசியம்! அதை வைத்துக் கொண்டு நான் அலைத்து திரிவேனே!

சூரியனின் கீழ் துயில் கொள்ளும் மரங்களின் அடியில் வேகமற்ற ஜலம் வந்து மோதிப் போகுமிடத்தில், நான் காதோடு காதாய் இரகசியம் சொல்ல யாராவது இருந்தால்—

அமைதியான இந்த அந்திவேளை ஒரு காலடியோசையை எதிர்பார்த்திருப்பது போற் தெரிகிறது. நீ என் கண்ணீருக்குக் காரணம் கேட்கிறாய்!

என் அழுகையின் காரணத்தை உன்னிடம் சொல்லமுடியாது. ஏனெனில் அது இன்னும் எனக்கே தெரியப்படுத்தப்படாத ஓர் இரகசியம்.

நான் உனக்குக் கங்குலைப் போலவேயிருக்கிறேன் —சிறிய மலரே இருளிடை மறைந்திருந்தே விழிப்படைந்த மோனத்தையும் சாந்தியையும் நான் உனக்கு அளிக்கமுடியும்.

காலையில் நீ கண்விழித்ததும் வண்டுகளின் ரீங்காரத் தொனி நிரம்பியதும், புள்ளினங்களின் கீதம் நிரம்பியதுமான ஓர் உலகத்தில் உன்னை விட்டுச் செல்வேன்.

உனக்கு என் அந்திம அன்பளிப்பு உன் இளமையின் ஆழத்தில் சொட்டிய என் கண்ணீர் திவலையாகவே இருக்கும். உன் புன்னகையை அது மேலும் சோபிதமடையச் செய்து பகல்வேளையின், இரக்கமற்ற கலகலப்பான உல்லாசத்தின் மேல் பரவும் உன் நோக்கை மங்கலாக்கிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

அன்பான மருமக்களே!

இம்முறை **திருக்கேதீச்சரம்** என்னும் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

இங்ஙனம்
**கூட்டுறவு மாமா**

## திருக்கேதீச்சரம்

இத்திருத்தலம் இலங்கையில் மாதோட்டத்தில் மன்னார்ப் பகுதியில் பாலாவி நதியின் கரையில் உள்ளது. ஈசுவரம்: ஈசுவரன் கோயில் கொண்ட இடம் என்னும் பொருள் தரும். கேது + ஈசுவரம் = கேதீச்சரம். கேதுவால் வணங்கப்பட்ட ஈசுவரன் கோயில் கொண்ட இடம். 'திரு' என்பது சிறப்பு, அழகு முதலியவற்றை உணர்த்தும் அடைமொழி. திருப்பாற் கடலைக் கடைந்து எடுக்கப்பட்ட அமுதத்தைத் திருமால் தேவர்களுக்கு வழங்கும் போது, சூரியனுக்கும், சந்திரனுக்கும் நடுவே, அவுணன் ஒருவன் மாறுவேடத்துடன் அமுதமுண்ண வந்திருந்தான். அதனைச் சூரிய, சந்திரர்கள் திருமாலுக்குத் தெரிவிக்கத் திருமால் அவ்வவுணனை அமுதம் பரிமாறிய அகப்பையினால் அடிக்க அவன் தலைவேறு உடல் வேறாயினன். வேறாய அவ்விரண்டுள் தலை 'இராகு' எனவும், வால் கேது எனவும் பெயர் பெற்று அமுதமுண்டமையால் இருவராய் இறப் பொழிந்து வாழ்ந்தனர். அவர்களுள் கேதுவால் வழிபட்ட ஸ்தலம் கேதீச்

சரம். தம்மைக் காட்டிக் கொடுத்த சூரிய, சந்திரரை இராகு, கேதுக்கள் இடையிடை பீடிக்கின்றன என்பதும், அதுவே கிரகணம் எனப்படும் என்பதும் புராணக்கதை.

கிறீஸ்துவுக்கு எட்டு நூற்றுண்டுகளுக்கு முன் அந்த ஸ்தலம் இருந்ததாக மகாவம்சத்திற்கு முந்திய சில சிங்கள நூல்கள் கூறுகின்றன. சிதைவுற்றிருந்த இந்த ஸ்தலத்தை விஜயன் புதுக்கியமைத்தானென்றும் அது அவனல் வணங்கப்படும் பொருட்டு பாண்டி நாட்டினின்றும் வந்த பாண்டியன் மகளால் வணங்கப்பட்டதென்றும் மகாவம்சம் கூறுகிறது. பல நூற்றுண்டுகளுக்குமுன்பு இங்கே இராவணனின் மனைவியாகிய மண்டோதரி சிவலிங்கமமைத்து வணங்கினளென்றும், பின்னர் அங்கே அவள் தந்தையான மயன் என்னும் சிற்பி ஒரு கோயில் செய்தான் என்றும் வரலாற்ருசிரியர் கூறுகின்றனர்.

இத்திருத்தலம் நாயன்மார்கள் வாழ்ந்த கிறீஸ்துவுக்கு பின் 7 ஆம், 8 ஆம், 9 ம் நூற்றுண்டுகளிற் சிறப்புற்றிருந்தமையைசம்பந்தர், சுந்தரர் தேவாரப்பாக்களால் அறியப்படும் எனவும், சோழ அரசர்களுடைய ஆதிக்கம் இலங்கையில் இருந்த 11 ம் நூற்றுண்டில் சோழர்கள் பழைய ஆலயங்கள் பலவற்றை புதுப்பித்தும், புது ஆலயங்கள் பலவற்றை நிருமாணித்தும் சைவசமயத்தை வளர்த்தனர் எனவும், அக் காலத்திலே இத்திருத்தலம் அழகுற அமைக்கப் பட்டது எனவும், இவற்ருல் இத்தலம் கி. பி. 7 ஆம், 8 ஆம், 9 ஆம், 10 ஆம், 11 ஆம், நூற்றுண்டுகளில் சிறப்புற்றிருந்தது என்பது அறியப்படும் எனவும் ஆராய்ச்சியாளர் கூற்றுக்களால் விளங்கக்கிடக்கின்றது.

இத்தலம் இருந்த பிரதேசத்தை அகழ்ந்து கண்ட சில பழைய சின்னங்கள் சிந்து நதிக் கரையிற் கண்டெடுத்த சின்னங்கள் போன்றனவை என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இதிலிருந்து மாந்தை நகர் நாகரீகம் மிகப் பழைய நாகரீகம் என்று ஊகிக்க இடமுண்டு. இத்தலத்தைப் பற்றி, மாந்தைப் பள்ளு, கதிரைமலைப் பள்ளு, விசுவகர்மநாடகம்,என்னும் நூல்களால் அறியப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண கூட்டுறவு மாகாண வங்கி

அறவிடப்பட்ட பங்கு ரூபா 191,495-00
சட்டரீதி அடக்கப்பணம் ,, 247,625-00
மற்றும் ,, ,, 414,662-00

*நிலையான வைப்புப் பணத்திற்கு*
*3, 6, 12 மாதங்களுக்கு*
*முறையே 1½, 2½, 3½ வீத வட்டி கொடுக்கப்படும்.*

**கவனிப்பு :-**

ஐந்து அல்லது மேற்பட்ட வருட வைப்புப் பணத்திற்கு
4 வீத வட்டியும்,

பத்து அல்லது மேற்பட்ட வருட வைப்புப் பணத்திற்கு
4½ வீத வட்டியும் கொடுக்கப்படும்.

☞ சங்க உத்தியோகஸ்தரின் பிணைப்பணத்திற்கு
3 வீத தொடர் வட்டி கொடுக்கப்படும்.

பிணைப்பணம் வருடவீதம் புதுப்பிக்கப்படத் தேவையில்லை.
ஒரு மாதத்திற்குமுன் அறிவித்தல் கொடுத்தால் எடுக்கலாம்.
பணம் எடுக்கும் நாள் வரைக்கும் வட்டி கொடுக்கப்படும்.

**சேமிப்புப் பணத்திற்கு**
**3 சத வட்டி கொடுக்கப்படும்.**

விசேஷ கவனிப்பு :-

சேம வைப்பில் நாளாந்தம் பணம் எடுக்கவும்
போடவும் வசதி உண்டு.

பவுண் நகைகள் அடைவு பிடிக்கப்படும்; வட்டி வருடம் 9%
பாகம் பாகமாகக் கடனைக் கட்டி அடைவு மீட்க வசதியுண்டு.

***கிளைகள் :-***

யாழ்ப்பாணம், பரந்தன், சுன்னாகம், நெல்லியடி,
சாவகச்சேரி, சங்கானை, ஊர்காவற்றுறை,
வலி-கிழக்கு (ஆவரங்கால்)

*தலைமைக் காரியாலயம்: பிரதான வீதி, யாழ்ப்பாணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[Registred as a News paper in Ceylon, Regd. No. A 13]

# உருளைக்கிழங்கு உற்பத்திப்பெருக்கச் செய்கை

**1. விதைப்புக்குமுன்னர் தொற்றுநோயை நீக்கல்**

விதை கிழங்கைப் பீடிக்கும் தொற்று நோயை நீக்க, விதையை நாட்டும் முன்னர் **"செரசான்"** என்னும் வித்து தொற்று நோய் நீக்கியில் பரிகரித்துப் பாவித்தல் நலம். ஒரு அவுன்ஸ் **"செரசான்"** தொற்று நீக்கியை 5 கலன் நீரில் கலந்து — 28 இருத்தல் உருளைக் கிழங்கைப் பரிகரிக்கலாம்.

**2. பிற்கூற்று வெளிறல் நோய் [Late Blight]**

Appropriate Technology
NALLUR, JAFFNA
No.

இந்நோய் ஒரு வகைப் பங்கசினால் உண்டாகின்றது. இதைக் கட்டுப்படுத்த **"அன்றக்கோல்"** $1\frac{1}{2}$ இருத்தல் 50—60 கலன் நீரில் கலந்து இலைகளின் மேற்புறமும், கீழ்ப்புறமும் நன்கு தோயும் வண்ணம் ஒரு ஏக்கருக்குத் தெளித்தல் வேண்டும்.

**3. ஆனைப் பேன்.** *(எப்பிலக்னே வண்டு).*

உருளைக்கிழங்குச் செடியில் இருந்து இப்பூச்சியை அகற்ற

(1) பொலிடோல் E 605 — 1 அவுன்ஸ் 8 — 10 கலன் நீரில் கலந்து பாவிக்கவும் அல்லது
(2) பொலிடோல் M — 1 அவுன்ஸ் 8—10 கலன் நீரில் கலந்து பாவிக்கவும் அல்லது
(3) பொலித்தியோன் — 1 அவுன்ஸ் 4 கலன் நீரில் கலந்து பாவிக்கவும்.

**கிழங்கைத் தாக்கும் அந்திப் பூச்சி**

இதை அழிக்க லெபேசிட் 50% ஈ. சி. 1 அவுன்ஸ்சை 5 கலன் நீரில் கலந்து ஏக்கருக்கு 60 கலன் வீதம் தெளிக்கவேண்டும்.

**எறும்புகள்**

தோட்டத்தில் எறும்புகள் காணப்பட்டால் ஒரு அவுன்ஸ் லெபேசிட் 50% ஈ. சி.யை 4 கலன் நீரில் கலந்து பாவிக்கலாம். இந்தக் கரைசல் 400 அடிச் சாலுக்குப் போதுமானது.

*கிடைக்குமிடம்:*

**வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச்சமாசம்**
111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

Edited & published by T. SEENIVASAGAM, B. A., J. P. residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Northern Division Co-operative Federation, Ltd., Main St., Jaffna and printed at the N. P. Co-op. Ptg. & Pub. Socy., Ltd., Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org